பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 27உ (13—10—67) வெள்ளி வெளியூர் : புரட்டாசி 28உ (14—10—67) சனி [இதழ் : 100

விளம்பரங்கள், விபரீதங்களை விளைவித்ததற்கு உதாரணம் வேண்டுமானுல், வேறெங்கும் போகவேண்டியதில்லை—'ஏர் இந்தியா'வின் 'மகாராஜா' வரிசைகளைக் கவனித்தாலே போதும்!

அதே பாணியில் இப்போது 'இந்தியன் ஏர் லைன்ஸ்' நிறுவனமும் போகிறதோ—என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது!

அறிவுரைகள் போன்ற அமைப்பு முறையில் அண்மைக் காலமாக அது வெளியிடும் விளம்பரங்களை உற்றுக் கவனித்தால், இரயில்வேத் துறைக்குப் போட்டியாக இருப்பதாகத்தான் அது தோன்றுகிறது!

"இந்த இடத்திலிருந்து இந்த இடத்துக்கு—தரையில்—அதாவது, இரயிலில் முதல் வகுப்புப பெட்டியில் செல்வதென்றுல் இவ்வளவு ரூபாய்—பிடிக்குப் நேரம் இது; எனவே, இதே ரூபாயில்—இதைவிடக் குறைந்த நேரத்தில்—அதிக வசதியுடன் விமானத்தில் சென்றுல் என்ன?"

என்று கேட்டு விளக்கம் கொடுக்கும் விளம்பர வரிசைகளை இந்தியன் ஏர் லைன்ஸ் வெளியிடுகிறது!

இரயில்வேத் துறையும் ஒரு பொது நிறுவனம்தான்; அது மட்டுமல்ல; மத்திய அமைச்சரவையின் நேரடிப் பார்வையிலும் இருப்பது!

தரை மார்க்கத்தில் பஸ் போக்குவரத்தினுல் பாதிக்கப்பட்டு ஏற்கனவே பொலிவு இழந்துவரும் இரயில்வே இலாகா, விமானத் துறையின் இத்தகைய விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டு இன்னும் விழிப்புக்கொள்ளாமல் இருப்பது வருத்தப்பட வேண்டிய ஒன்றுதான்!

## தென் சென்னைக் காங்கிரசு வேட்பாளர் திறமை பாரீர்!

# 'கேள்வி' கேட்கும் இலட்சணம் 'இங்கே'யே தெரிகிறது!

## அங்கேபோய் வேறு கேலிக்கு ஆளாவானேன்?

**"தமிழைக் காக்க மாறன் வெற்றி பெற வேண்டும்" என்று முதலமைச்சரும், மற்ற தி. மு. க. தலைவர்களும் கூறுகிறுர்கள். "தமிழைக் காக்க மாறன் வெற்றிபெற வேண்டுமென்றுல், ஏற்கனவே பாராளுமன்றத்தில் உள்ள தி. மு. க. உறுப்பினர்கள், தமிழைக் காக்க முடியாதவர்க[illegible]?"**

சிந்தாதிரிப்பேட்டையில் நடந்த தேர்த[illegible] பிரச்சாரக் கூட்டத்தில், காங்கிரசு வேட்பாளர் போட்டிருக்கும் இ[illegible]க் 'கோதாப் பிடி', 'நவசக்தி'ச்கு இன்று எட்டரை பத்திச் செய்தி[illegible] தலைப்பாகப் பயன்பட்டிருக்கிறது!

**கேள்விகள் கேட்டு மடக்க வேண்டிய இடம் அ[illegible]வா பாராளுமன்றம்?—அதில், தனக்கு இருக்கும் பாண்டித்தி[illegible]த்தை, 'சாம்பிள்' காட்டியிருக்கிறுர் காங்கிரசு வேட்பாளர்!**

**'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்' என்பார்கள்! அந்த 'ஒரு சோறு'ம், 'வேக்காடு' இல்லாதது என்பதனைக் கீழே காட்டியுள்ளோம்; படியுங்கள் :—**

"'இரும்புக் கூட்டின் கதவுகள் திறக்கப்பட்டன; சிறுத்தையே வெளியில் வா' என்று, புரட்சிக் கவிஞர் பாடினுரே—அதைப்போல், மாறனைப் பார்த்து, 'வெளியே வா! பரந்த உலகத்தைப் பார் — பாராளுமன்றத்தைப் பார் — அங்கே குவிந்துகிடக்கின்ற அதிகாரங்களைப்பார்—அவற்றில் எதை எனக்கு வாங்கிக் கொடுக்கப் போகிருய்?

"டில்லியிலுள்ள 24 பேருடன் நீயும் சேர்ந்து எனக்கு எதைப் பெற்றுத் தரப்போகிருய்? என்று கேட்கத்தான், மாறனை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தேன்!"

—'நம் நாடு' : 10—10—67

இது, **அண்ணு** அவர்கள், தியாகராயநகர் கூட்டத்தில் பேசியது; இதில், 24—25 ஆகிய எண்ணிக்கைகளின் முக்கியத்துவம் பற்றி அவர் பேசியிருப்பது, காங்கிரசு வேட்பாளரால் எப்படிப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா?

இன்னுமொன்று; இது, **வேட்பாளர் மாறன்** அவர்களே அக்கூட்டத்தில் பேசியது :—

"நான் பாராளுமன்றத்திற்குச் சென்றுல் இராணுவத்தைத் தடுக்க அகழி வெட்டுவதில், **நமது உறுப்பினர்கள் 24 பேர்களுடன் 25-வது நபராகப் பணியாற்றுவேன்."**

—'முரசொலி' : 10—10—67

ஏற்கனவே உள்ள 24 பேர் பற்றியும், மேலும் சேரப்போகிற 25-வது உறுப்பினர் பற்றியும் அண்ணு — மாறன் இருவருமே பேசியது இவை!

**ஆனுல் காங்கிரசு உறுப்பினரோ, வாக்குகள் சேகரிக்க முயலுவதை விட்டு, 'கயிறு திரிக்கும்' வேலையில் இறங்கியிருக்கிறுர்! முறுக்கற்று அறுந்து விழும் இப்படிப்பட்ட கயிற்றை நம்பி காங்கிரசுப் பத்திரிகை, எட்டரைப் பத்தி தலைப்பு வேறு போடுகிறது!**

—எஸ். ஆர்.

# தெரியாது...தெரியாது! தெரியாதுன்னேன்!

நிருபர் :—"வங்காளத்தில் தற்காலிகக் காங்கிரசுக் கமிட்டியை நிறுவியிருப்பது, புதிய அரசியல் சூழ்நிலைகளுக்கு வழிவகுக்குமா?"

காமராசர் :—"எனக்கு அதெல்லாம் தெரியாது."

நிருபர் :—"இருந்த கமிட்டியைக் கலைப்பானேன்? அந்த இடத்தில் வேருெரு கமிட்டி அமைப்பானேன்? காரணங்கள் சொல்ல முடியுமா?"

காமராசர் :—"அதையெல்லாம் என்னிடம் கேட்காதீர்கள்; எனக்குத் தெரியாது."

நிருபர் :—"வங்காளக் காங்கிரசுக்கு இந்தத் தற்காலிகக் கமிட்டி, பூஜா பரிசா?"

காமராசர் :—"(சிறிது சிரிப்பு) அதுவும் தெரியாது(ன்னேன்!)"

## 'மக்கள் எங்கே கேட்கப் போகிறுர்கள்' என்ற துணிவில்....!

நிருபர் :—"பிரதேசக் காங்கிரசுக் கமிட்டியின் நிர்வாகக் கமிட்டியைக் கலைப்பதற்கான காரணங்கள் என்ன?"

காமராசர் :—"என்னிடம் இந்தக் கேள்விகளைக் கேட்காதீர்."

நிருபர் :—"மக்கள் இந்தக் கேள்விகளைக் கேட்டால்......?"

காமராசர் :—"அவர்கள் என்னைக் கேட்டால், நான் அவர்களுக்கு விளக்குவேன்!"

**—12—10—67-ல், புதுடில்லியில், பத்திரிகையாளர் கூட்டத்தில் நடைபெற்றது.**

# அமைச்சர் மதியழகனின் திறமை மிகுந்த பணி

## தஞ்சை அரிசி அனுப்பு விழாவில் அறிஞர் அண்ணு பாராட்டுரை

11—10—67 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற சென்னைக்கும், மற்ற மாவட்டங்களுக்கும் அரிசி வேகன்களிலும், லாரிகளிலும் அனுப்பும் விழா நடைபெற்றபோது விழாவிற்குத் தலைமை தாங்கிய அறிஞர் அண்ணு அவர்கள், உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகனைப் பாராட்டிப் பின்வருமாறு பேசினுர் :—

"நமது உணவு அமைச்சர் மதியழகன் அவர்கள், உணவுத் துறையை வெகு திறமையாகவும் சுறுசுறுப்போடும் ஆர்வத்துடனும் மெத்த அக்கறை கொண்டும் நிர்வகித்து வருகிறுர். அந்த முயற்சிகளுக்கு நல்ல பலன் உருவாகி வருவது எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

"வெளி மாநிலங்களிலிருந்தும் மற்றும் வேறு இடங்களிலிருந்தும் உணவுப் பிரச்சினை பற்றி என்னிடம் பலர் பேச வரும்போதெல்லாம், உணவு அமைச்சர் மதியழகனைக் கூப்பிட்டு அனுப்புவது வழக்கம். வருகிறவர்கள் அனைவரும், அவர் உடல் தோற்றத்தையும், உறுதியையும் பார்த்து, உடன், 'நமது உணவு நிலை சீராகவும் செம்மையாகவும் இருக்கிறது' என்ற முடிவுக்கு வருகிறுர்கள்.

"உடல் வளமும்—உடல் உறுதியும் மட்டும் இல்லாமல், அவர், உள்ள உறுதியும் தெளிவான முடிவுகள் எடுக்கும் திறனையும் பெற்றிருக்கிறுர்.

"உணவு நெருக்கடியைச் சமாளிக்கும் நமது முயற்சியில் குறிப்பிட்ட ஒரு வெற்றிகரமான கட்டத்தை அடைந்திருக்கிற இந்த நேரத்தில் அவருக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

## தஞ்சை அரிசி ஏற்றிவந்த தனி இரயில்

### சென்னை சேர்ந்தது

சென்னை, அக். 12—

சென்னைக்கு அரிசி ஏற்றிக்கொண்டு தஞ்சையிலிருந்து புறப்பட்ட தனி இரயில் வண்டி இன்று காலை 3-50-க்கு சென்னை எழும்பூர் வந்து சேர்ந்தது.

நாற்பத்து நான்கு வாகன்களைக் கொண்ட இந்த வண்டியிலிருந்து அரிசியை இறக்கும் வேலையை சிவில் சப்ளை தனி உதவி கலெக்டர் மேற்பார்வையிட்டார்.

இறக்கப்பட்ட அரிசி மூட்டைகள் நகரில் உள்ள கிடங்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## சென்னை மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகளுக்கு:

"அக். 14, 15 ஆகிய நாட்கள் சென்னை எஸ். ஜி. எஸ். சபா மண்டபத்தில் (அபிபுல்லா ரோடு) நடைபெறவிருக்கும் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் சிறப்பான வகையில் நடைபெற ஒத்துழைப்பதற்காக, மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் அனைவரும் 14-10-67 காலை 8-மணிக்கே பொதுக் குழு நடைபெறும் இடத்திற்கு தவருமல் வருகை தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்"

என, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் கேட்டுக் கொள்கிறுர்.

## 'புதுமையானது — போற்றப்பட வேண்டியது'

சென்னை, அக். 11—

"தமிழக அரசின் மத்திய பகலுணவுக் கூடத்தை நான் பார்வையிட்டேன்; 'கேர்' நிறுவன உதவியுடன் நடத்தப்படும் இத்திட்டம் புதுமையானதும் போற்றப்பட வேண்டியதுமாகும்"

என்று, அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தலைமை அதிகாரியான ஜோசப் என். கிரீன், செய்தியாளர்களிடம் கூறினுர்.

## தென் சென்னை இடைத் தேர்தல்

### வாக்குப் பதிவு நாளில் மாற்றம்

சென்னை, அக். 13—

**"தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு, 7-ம் நாளன்று நடைபெறும்" என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.**

## மாநகராட்சி இரங்கல்

சென்னை, அக். 10—

நேற்று, மேயர் இரா. சம்பந்தம் தலைமையில் நடந்த சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில், முன்னுள் பிரிட்டன் தலைமை அமைச்சர் அட்லி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இந்தி வெறியரின் அறியாமை!

## முன்னாள் இராணுவ வீரர் வெளியிடும் புதிய தகவல்

"இந்தி வெறியர் சேத்கோவிந்த தாசு, 'தமிழகத்திற்கு இராணுவத்தை அனுப்பவேண்டும்' என்று பேசியுள்ளது, அவர் நமது இராணுவத்தைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் எவ்வளவு அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறார் என்பதைத் தான் காட்டுகிறது.

ஆங்கிலேயர் வெளியேறியதற்குக் காந்தியார் அல்லது கதர்க் குல்லாய் அணிந்தவர்கள் மட்டுமே காரணகர்த்தர் அல்லர் என்பதை நாம் நினைவு படுத்திக்கொள்வது நல்லது.

இராணுவத்திலும், விமானப் படையிலும் நாட்டுப் பற்றுடன் செயல்பட்ட பலர், ஆங்கிலேயர் வெளியேற முடிவு செய்ததற்குக் காரணமாக இருந்திருக்கிறார்.

'எங்கள் நாட்டு மக்களை நாங்களே சுடமாட்டோம்' என்று மறுத்துரைத்த 'ரெஜிமெண்டு'களைப் பற்றிய தகவல்களை, இன்னும் அதிக நாட்கள் மூடிமறைத்து வைக்க முடியாது.

'இந்தி ஆட்சிமொழி ஆகவேண்டும்' என்பதற்காகவும், 'இந்தி வெறியர்கள் ஆட்சி பீடங்களில் அமரவேண்டும்' என்பதற்காகவும், இந்த இந்தி ஆதிக்கக்காரர்கள் எவ்வளவு தூரம் செல்லக்கூடியவர்கள் என்பதை எண்ணும்போதே அதிர்ச்சி ஏற்படுகிறது"

என்று, பெங்களூரைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் ஏ. என். எஸ். மூர்த்தி எனபவர், 'டெக்கான் ஹெரால்டு' நாளேட்டில் எழுதியிருக்கிறார்.

# அந்தத் தகுதி இந்திக்கு இல்லை!

"ஆட்சிமொழிக்கு மூன்று தகுதிகள் வேண்டும்; ஒன்று—கேட்பவர்களுக்குப் புரியவேண்டும்; இரண்டாவது—சொல்பவனுக்குக் குழப்பம் ஏற்படாமல் இருக்கவேண்டும்! மூன்றுவது—சொல்பவன் ஆற்றல் பெறத் தகுதியுள்ளதாக மொழி இருக்க வேண்டும்!

"பெரும்பாலோர் பேசுகின்ற மொழி என்பது மட்டும் ஆட்சி மொழிக்கு இலக்கணம் ஆகாது! மேற்சொன்ன மூன்று காரணங்களை வைத்து இந்தியாவின் ஆட்சிமொழிப் பிரச்சினை இதுவரை ஆராயப்படவில்லை!

"பாராளுமன்றத்தில் இந்தியில்தான் அதிக நேரம் பேசுகிறார்கள்; ஆனால் ஆற்றலோடு பேசுகிறார்கள் என்று நான் சொல்ல முடியாது!

"பதினைந்து மொழிகள் என்ற பெயரால் இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டப் பார்க்கிறார்கள்! தமிழ் மொழிக்கு இடம் கிடைக்கிறது என்று நாம் ஆங்கிலத்தை அகற்றிவிட்டால், கண்ணைக் கட்டிக் காட்டிலே கொண்டுவிட்டதுபோல இருக்கும்! தமிழில் நாம் சொல்வதை இந்தியில் மொழிபெயர்த்துவிட முடியாது! அந்தத் தகுதி இந்திக்கு இல்லை! தமிழிலே பேசுவதை இந்தி ஈடுகொடுத்து நிரப்பமுடியாது!

"இந்தி ஆட்சிமொழியாகத் தகுதியுடையதா என்ற கேள்வியை நான் எழுப்புகிறேன். இந்திக்கே இன்னொரு இந்தியில் மொழிபெயர்க்க வேண்டி இருக்கிறது! பல்வேறு காலத்தில்—பல்வேறு சூழ்நிலையில் வளர்ந்த மொழிகள் எல்லாம் இன்று இந்தி மொழியாக இருக்கிறது. அது இன்னும் மொழி என்ற தகுதியையே பெறவில்லை!

"'ஆங்கிலத்தில் உள்ள சட்டத்தை எல்லாம் இந்தியில் மொழி பெயர்க்க முடியாது' என்று சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் பேசப்பட்டது! இந்தி மொழிக்கு அந்தத் தகுதி வராது! இந்தி மொழிமீது நமக்குப் பகையில்லை; தமிழ் மொழிமீது தமிழர்களுக்குள்ள சொந்தம், இந்தி மொழிமீது இந்திக்காரர்களுக்கு உண்டு!

"தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழி என்றால், தமிழர்களுக்குப் புரிகிறது! மற்ற மாநிலங்களிலும் அந்தந்த வட்டார மொழி ஆட்சி மொழியாக இருப்பதால் விளங்குகிறது! அதுதான் அந்த மக்களுக்கு நிறைவு அளிக்கும்!

# பொறுப்பை உணர்ந்து செயல்பட முனைவீர்!

## பொதுத் தேர்தலைவிட இந்த இடைத் தேர்தல் மிகப் பொறுப்பு வாய்ந்தது!

### கழகத் தோழர்களுக்கு இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

"அண்ணா அவர்கள் வெற்றிபெற்ற தொகுதியில் மாறனை நிற்க வைத்திருக்கிறோம். எதையும் சிந்திக்கும் ஆற்றல்பெற்ற—பிறர் மனதில் பதியும்படி எழுதும் ஆற்றல்மிக்க மாறன், 'தமிழகத்தின் பெருமையை டெல்லியில் நிலைநாட்டுவார்—டெல்லிக்குச் சென்றால் இந்திக் திணிப்புக்குச் சாவுமணி அடிப்பார்' என்று கருதித்தான்—'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்' என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க—அனைத்திற்கும் தகுதியுடையவரான மாறனை, அண்ணா அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

"'இராணுவத்தை வைத்தாவது இந்தியைத் திணிப்போம்' என்று திமிரோடு கூறுவோருக்கு அறைகூவல்விட—'இந்தி வெறியர்களின் அதிகாரத்திற்கு அஞ்சோம், அஞ்சோம்' என்று எடுத்துக்காட்ட—டில்லி ஏகாதிபத்திய ஆதிக்க எண்ணத்தை முறியடிக்க—மாறனுக்கு வெற்றித் தேடித் தாருங்கள்!

"பொதுத் தேர்தலைவிட இப்பொழுது நடக்கும் இடைத் தேர்தல் மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும்! 'பொதுத் தேர்தலில் காங்கிரசை வீழ்த்தி விட்டோமே' என்று அலட்சியமாக இருந்துவிடாதீர்கள்!

"அடிபட்ட புலிபோல அவர்கள் இருக்கிறார்கள்! அவர்களை நீங்கள் சாமான்யமாகக் கருதிவிடக்கூடாது! இந்தத் தேர்தலில் அகில இந்தியக் காங்கிரசே தனது முழு வலிமையும் காட்ட இருக்கிறது!

"கூட்டங்கள் அதிகமாகப் போடக்கூடாதென்றும், திட்டிப் பேசும் காங்கிரசுப் பேச்சாளர்களை மேடையில் ஏற்றக்கூடாதென்றும், அதற்குப் பதிலாக இரவோடிரவாக—12 மணிக்கு மேல் வீடு வீடாகச் செல்ல இருக்கிறார்கள் என்றும் இரகசியமாக எனக்குத் தகவல் வந்துள்ளது.

"ஆதலால், தோழர்கள் விழிப்புடனிருக்க வேண்டும்! பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட வேண்டும்! 'மாறன் வெற்றி பெறுவது உறுதி' என்றால், அதிக வாக்குகள் மூலம் அவர் வெற்றி பெற நீங்கள் முயலவேண்டும்!"

# ஆங்கிலம் கற்பது தேசத் துரோகமா?

## இந்தி மாநிலத்தில் இடித்துரை

லக்னோ, அக். 12—

"இன்னும் சிறிது காலத்துக்கு ஆங்கிலம் முக்கிய இடத்தை வகிக்கும்; அதை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது; ஆகவே, ஆங்கில அறிவு பெற எல்லா வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.

"அரசின் பணியை வேண்டுமானால் நமது தாய் மொழியில் நடத்தலாம்; ஆனால், ஆங்கிலத்தைக் கற்பதையோ, பேசுவதையோ, நாட்டுப் பற்றில்லாத செயலாகக் கருதலாகாது"

என்று, பழம்பெரும் காங்கிரசுக் காரரும், உ. பி. மாநிலத்தின் கவர்னராக உள்ளவருமான திரு. பி. கோபால் (ரெட்டி) இங்கு கூறினார்.

உ. பி. மாநிலப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தி பேசும் பகுதி மாணவர்களிடம் மும்மொழித் திட்டம் எடுபடவில்லை. தேசிய மொழியாகவும் உள்ள தங்கள் தாய் மொழியைக் கற்பதுடன் இந்திக்காரர்கள் திருப்தியடைந்துவிடுகிறார்கள்; ஏனைய மொழிகளைக் கற்பதில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை.

"எல்லாக் கட்டங்களிலும் ஆங்கிலம் விருப்பப் பாடமாகக்கப்படவேண்டும்; ஆனால் ஆங்கிலக் கல்வியை நீடிக்க விரும்பும் மாணவர்களுக்கு நாம் எல்லா வசதியும் அளிக்கவேண்டும்.

"இந்தியாவில் சிலருக்கே ஆங்கிலம் தெரிந்திருந்தபோதிலும், ஆங்கிலம் கற்றவர்களே எல்லாத் துறைகளிலும் தலைவர்களாகிறார்கள்."

# 'ஆட்சிமொழி இதுதான்' என வரையறை செய்வது அவசியந்தானா?

"ஆட்சி மொழிச் சிக்கல் சம்பந்தமாக, நேருவின் உறுதிமொழி நிறைவேறவில்லை; சாஸ்திரி வற்புறுத்திய சகிப்புத்தன்மையைக் காணோம்!

'இந்திரா காந்திகூட எதுவும் செய்ய முடியவில்லை' என்ற நிலையில் குமுறி எழுந்த மாணவர்களைக் கட்டுப்படுத்தி, 'அரசியல் ரீதியில் சட்டதிட்டத்திற்கு உட்பட்டே கொள்கைகளைச் சொல்ல வேண்டும்' என நமது முதலமைச்சர் அண்ணாதுரை முயன்று வெற்றி பெற்றிருக்கிறார். இந்த நேரத்தில் சேத் கோவிந்ததாஸ் போன்ற இந்தி வெறியர்கள் ஒய்யாரக் கூச்சலிடுவது நாட்டின் நலனுக்கு உகந்ததா?

ஒரு நாட்டிற்கு ஆட்சி மொழி தேவை; அது நிர்வாக மொழி; '200 ஆண்டுகளாக ஆதிக்கத்திலிருந்துவந்த ஆங்கிலத்தையே சரிவரத் தெரிந்துகொண்டவர்கள் ஒரு சதவீதம் பேர் தான்' என்றால், 'அரசியல் சட்டத்தில் எழுதிவிட்டோம்; எனவே, எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டும்' என்பதில் அல்லது வற்புறுத்துவதில் பொருளில்லை!

15 ஆண்டுகளில் இந்தியால், அரசியல் சட்ட விற்பன்னர்கள் எதிர்பார்த்த சாதனையை நிறைவேற்ற முடியவில்லை! ஆங்கிலத்தை அடியோடு கைவிடவும் முடியவில்லை! என்றுமே அது முடியாது!

இப்போது ஏற்பட்டுள்ள மொழிக் குழப்பம் வேறு வகையானது; குறிப்பாக, தமிழக அரசும் தி.மு.க.-வும் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கவில்லை! 'அதை ஏற்கப்போவதில்லை' எனத் திட்டவட்டமாகவும் அறிவித்துவிட்டனர்! 'மும்மொழித் திட்டம் மோசடித் திட்டம்' என்றும் தெரிவித்துவிட்டார்கள்! 'இந்தி பேசுகிற மாநிலங்களுக்குச் செல்ல விரும்புகிறவர்கள் இந்தியைக் கற்க எல்லாவிதமான வசதிகளும் செய்து தருகிறோம்; அதற்குத் தடையாகத் தமிழக அரசு இருக்காது' என்பதை முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் தெளிவுபடுத்தி விட்டார்கள்!

"நாட்டின் பொது மொழி அல்லது ஆட்சி மொழி இன்னது என்று நிர்ணயிப்பதோ, வரையறை செய்வதோ அவசியந்தானா?" என்ற கேள்வி எழுந்துள்ளது! உலகத்தில் எந்த நாட்டிலும், அரசியல் சட்டத்தில், 'இதுதான் நாட்டுப் பொது மொழி' என்று எழுதப்படவில்லை!

நிர்வாக வசதியைப் பொறுத்துப் பல மொழிகள் பயன்படுத்தப்படுகின்ற நாடுகளும் உண்டு; ஒரு மொழியையே பயன்படுத்தும் நாடும் உண்டு; எந்த நாட்டிலும், 'ஆங்கிலமே தேவையில்லை' எனச் சொன்னதாகத் தெரியவில்லை!

"தாய் மொழி கண் போன்றது! பார்வையில் கோளாறு ஏற்பட்டால் அணியும் மூக்குக் கண்ணாடி ஆங்கிலம்! இந்தி, குதிரை கண்ணில் மாட்டப்படும் ....போன்றது!

"தமிழ், தாய்ப்பால்! ஆங்கிலம் புட்டிப்பால்! இந்தி சுண்ணாம்புத் தண்ணீர்!

"நாம் மேட்டிலிருக்கிறோம்! இந்தி வெறியர்கள் பள்ளத்தில் இருக்கிறார்கள்! நம்மையும் பள்ளத்திற்கு அழைத்துக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள்!

"நாமோ, மேல் நோக்கி முன்னேறப் பார்க்கிறோம்! அவர்களோ, கீழ் நோக்கி இழுக்க முயற்சிக்கிறார்கள்!

"தமிழ் மட்டுமே படித்து அறிஞர்களான—அரசியல் தலைவர்களான பெருமக்களை நாம் இங்கு காணலாம்; ஆனால், இந்தி மட்டுமே படித்து அறிஞர்களானவர்களை-அரசியல் தலைவர்களானவர்களை இந்தி வெறியர்களால் காட்ட முடியுமா?"

என்று கம்பீரக் குரல் கொடுத்து, திரு. க. அன்பழகன், தென் சென்னைத் தொகுதித் தேர்தல் பிரசாரத்தை முடுக்கிவைத்திருக்கிறார்!

எனவே, முன்னாள் முதலமைச்சர் விடுத்த சவாலை தி. மு. க. ஏற்று, பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டது!

'இந்தி தேவைதான்; அவசியம்தான்' என்று காங்கிரசுக்காரர்கள் ஆவேசத்துடன் பேச முடியுமா?—என்பது, பெரும் கேள்விக்குரிய பிரச்சினை! அப்படிப் பேசினால், அதற்குரிய விளைவு தென் சென்னைத் தேர்தல் முடிவில் வெகுவாகப் பிரதிபலிக்கும்!

மொழிப் பிரச்சினையை முடிவு கட்டுவதுதான் தென் சென்னை இடைத் தேர்தல்—என்று வருமானால், தி.மு.க.-வும் மற்ற கட்சிகளும் மிக ஆவேசத்துடனும், ஆர்வத்துடனும் பணியாற்றும் என்பது இப்போதே தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கிறது! இதைக் காங்கிரசுத் தலைவர்கள் எப்படிச் சமாளிக்கப்போகிறார்கள்?—பொறுத்திருந்து பார்ப்போம்!"

—'மித்திரன்' இதழில் 'காற்று வாக்கிலே' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையிலிருந்து

# தமிழகத்தின் சிறப்பு---

## மத்திய அமைச்சர் பெருமிதம்!

சென்னை, அக். 12—

“நீண்ட பாரம்பரியமும் கலாச்சாரப் பெருமையும் உடையது தமிழ்நாடு! இங்கிருந்தே உயர் தத்துவங்களேல்லாம் இந்நாட்டின் இதர பகுதிகளுக்குப் பரவின! ஆக நம் சிந்தை அனைத்தும் ஒன்ருகவே உள்ளன!

“தமிழக முதலமைச்சருக்கும் என்போன்ருேருக்கும் ஒரே சிந்தனைதான். சமுதாயம் முன்னேற வேண்டுமென்ற பொது நோக்குக்காகவே நாங்கள் உழைத்துவருகிருேம்”

என்று, மத்திய உணவமைச்சர் ஜெகஜீவன்ராம், சென்னை மாநகரர்ட்சி மன்றம் தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேயர் இரா. சம்பந்தம், தங்க முலாம் பூசப்பட்டிருந்த சிறிய தேர் போன்றதோர் பேழையில் வரவேற்பிதழை வைத்து அமைச்சரிடம் அளித்தார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களும், மற்றும் உணவமைச்சர் மதியழகன், வேளாண்மைத் துறையமைச்சர் கோவிந்தசாமி, செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து, சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனர், என். வி. நடராசன் எம்.எல்.சி. ஆகியோரும், அயல்நாட்டுத் தூதர்களும் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

மேயர் இரா. சம்பந்தம், தமது வரவேற்புரையில், “இந்தியாவில் உள்ள மாநகராட்சிகள் அனைத்துக்கும் பொதுவானதொரு சட்டம் தேவை” என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

“சென்னை மாநகராட்சி நீண்ட நெடுங்காலமாக மக்களுக்கு நன்மைகள் பலவற்றைச் செய்து நற்பெயர் ஈட்டியுள்ளது. கல்வித்துறையில் இம்மாநகராட்சியின் சாதனை குறிப்பிடத்தக்கதாகும்.

“கல்வி கற்கும் குழந்தைகட்கு இலவசமாக நூல்கள் வழங்கி, இந்தியாவின் இதர மாநகராட்சிகளுக்கும் சென்னை மாநகராட்சி வழிகாட்டியாக உள்ளது. இவ்வகையில் மிக நல்ல முறையில் இம்மாநகராட்சி இயங்கிவருகிறது.

“மாநகராட்சிகளுக்கெல்லாம் பொதுச் சட்டமொன்று இருத்தல் வேண்டுமென்று மேயர் அவர்கள் தெரிவித்த கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். இது குறித்து டில்லியில், இப்பொறுப்பிலுள்ள அமைச்சரிடம் எடுத்துரைப்பேன்.”

# காமராசர்

கூற்றுக்கு

## செகசீவன்ராம் பதில்

தமிழகத்திற்கு வந்திருந்த மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராமை செய்தியாளர்கள் சந்தித்து, விவசாயிகளுக்குத் ‘திடீர் பரிந்துரையாள’ராக மாறியிருக்கும் காமராசர் கூற்று பற்றி கேட்ட கேள்வியும் அமைச்சரின் பதிலும் வருமாறு :—

கேள்வி :— “கொள்முதல் விலை ஏற்றப்படுவதற்கு தி. மு. கழக அரசுதான் குறுக்கே நிற்கிறது என்பதாகக் காங்கிரசுத் தலைவர் காமராசர் சொல்லிவருகிருரே!”

பதில் :— “கொள்முதலுக்கான விலை நிர்ணயம் எந்தெந்த வகையில்—யாரால் செய்யப்படுகிறதென்பதை காமராசர் அறிந்திருக்கமாட்டாரென்று நான் நினைக்கிறேன். மாநில அரசு மட்டுமே இதை நிர்ணயிப்பதில்லை. விளைபொருள் விலை நிர்ணயித்துக்கும், குறிப்பாகக் கொள்முதல் நெல்லுக்கான விலை நிர்ணயிப்பதற்கும் உரிய அமைப்புகள் உள்ளன.”

## கருத்திருமனுக்கு!

கேள்வி :— “விவசாயம் இன்னதென்று தெரியாதவர்களெல்லாம் உணவுத்துறை பற்றிப் பேசவும், கொள்முதல் நெல்லுக்கான விலை நிர்ணயம் பற்றிப் பேசவும் வந்துவிடுவதாக கருத்திருமன் கூறியிருக்கிருரே!”

பதில் :—“அப்படிச் சொன்னவர் யாராக இருந்தாலும், அவரைவிட எனக்கு விவசாயம் பற்றித் தெரியுமென்று சொல்கிறேன். இன்றளவும் நான் விவசாயி; ஏர் பிடித்து உழுதவன் நான்!”

# புளி - பருப்பு விலை கட்டுப்பாடு

## மத்திய அரசின் நிலை?

சென்னை, அக். 12—

“புளி விலை அதிகரித்துக் கொண்டே போவதைத் தடுத்திட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?” என்று, மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராமிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ‘உணவுக் கார்ப்பரேஷன் அந்தந்தப் பருவ காலத்தில் புளியை வாங்கி நியாய விலைக்குக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யும்; இது குறித்து மாநில அரசுகளின் கருத்தறிந்து அவற்றின் விருப்பப்படியே நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று அமைச்சர் கூறினர்.

கேள்வி :— “புளியை உணவுக் கார்ப்பரேஷன் வாங்கி வழங்கும் என்று கூறுகிறீர்களே—அதுபோல் பருப்பு வகைகளையும் தமிழக அரசு கோரியுள்ளது போல்—அரசே கொள்முதல் செய்து தேவையான மாநிலங்களுக்கு வழங்கினுல் என்ன?”

பதில் :— “இந்த யோசனையும் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. உளுந்துக்கு இப்படி ஒரு திட்டத்தை ஓரளவு அமுலாக்கி அனுபவம் பெற்றிருக்கிருேம்.”

# தமிழகத்திற்குக் கூடுதல் சர்க்கரை

சென்னை, அக். 9—

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, தமிழ்நாட்டுக்கு 2,000 டன் சர்க்கரை கூடுதலாக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது.

சென்னைநகரில் கீழ்க்கண்ட அளசர்க்கரை வழங்கப்படும் :—

தற்போது அரை கிலோ பெறும் கார்டுக்காரர்களுக்குக் கூடுதலாக ஒரு கிலோ கிடைக்கும்; இரண்டு கிலோவும், அதற்கு மேலும் பெறுகிறவர்களுக்குக் கால் பங்கு கூடுதலாகக் கிடைக்கும்.

அக்டோபர் 16-ம் நாள் முதல் ஒரு மாத காலத்தில் இந்தக் கூடுதல் சர்க்கரையைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்தபட்சமாக அரை கிலோவும், அதிகபட்சமாக 2 கிலோவும் கூடுதலாகக் கிடைக்கும்.

உணவு விடுதிகள், இனிப்புப் பண்டக் கடைகள், மாணவ விடுதிகள் முதலியவற்றிற்கு 20 சதவிகித சர்க்கரை கூடுதலாகத் தரப்படும்.

கோவை மாவட்டத்தில் ஒவ்வொரு கார்டுதாரருக்கும் 1 கிலோ சர்க்கரை கூடுதலாகக் கிடைக்கும்.

மற்ற மாவட்டங்களில், வசதியைப் பொறுத்து 20 சதவிகிதம் கூடுதலாகக் கொடுக்குமாறு மாவட்டக் கலெக்டர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# பம்பாயில் அன்பில் தர்மலிங்கம்

## கழகத் தோழர்கள் வரவேற்பு

பம்பாய், அக். 8—

இங்கு நடைபெற்ற கல்வித்துறை மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்த திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்களை, பம்பாய் தி. மு. கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, எம். சின்னப்பா, நெல்லை வளவன் உட்பட ஏராளமானேர் சந்தித்து அளவளாவினர்.

7—10—67 மாலை 6-மணியளவில் பம்பாய்த் தமிழ்ச் சங்கத் தோழர்களின் விருப்பத்திற்கிணங்க தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும், அவரது துணைவியாரும் சங்கக் கட்டிடத்திற்குச் சென்றிருந்தார்கள். கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, நெல்லை சு. தங்கையா, சு. செழியன் உட்பட பலர் கலந்துகொண்டனர். சங்கத் தோழர்கள் கந்தசாமி உட்பட பலர் விருந்தினரை எதிர்கொண்டழைத்துச் சென்றனர். அழைப்பிற்கு நன்றி தெரிவித்து அன்பில் தர்மலிங்கம், அரியதோர் உரையாற்றினர்.

7—10—67 இரவு 8-மணியளவில் தாராவி தி. மு. கழக சார்பில் பொது உறுப்பினர்களின் வரவேற்புக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. செயலாளர் த. மு. பொற்கோ அனைவரையும் வரவேற்க—அவைத் தலைவர் பி. எஸ். செல்லையா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் இ. எம். முருகேசன், இராம. சண்முகராசன், அ. முத்தையா, இரா. செல்லத்துரை, கே. எம். பக்கீர்மைதீன், நெல்லை வளவன், இரா. சிதம்பரம், புதியம்புத்தூர் கழக ஊராட்சிமன்ற உறுப்பினர் அல்போன்சு ஆகியோர் பேசியபின், தோழர் அன்பில் தர்மலிங்கம், கழக வளர்ச்சி—சந்தித்த எதிர்ப்பு ஆகியவற்றை விளக்கியும், அறிஞர் அண்ணு அவர்களின் பேராற்றலையும் சுவைபட விளக்கி ஏறத்தாழ இரண்டு மணி நேரம் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின், பொருளாளர் எம். சின்னப்பா நன்றி நவின்ருர்.

கழகச் சார்பிலும் துணை மன்றங்களின் சார்பிலும் ஏராளமான கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன.

8—10—67 காலை 7-மணி விமானத்தில் தாயகம் புறப்பட்ட தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களை தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, எம். சின்னப்பா, சி. நா. சிதம்பரம், நெல்லை வளவன் உட்பட ஏராளமானேர் சென்று வழியனுப்பி வைத்தனர்.

## கடையநல்லூர் திராவிடமணி

கடையநல்லூர் தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் பம்பாயில் நடைபெறும் பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்ற 12-ம் தேதி பகல் வண்டியில் வந்திறங்கினுர்கள். 14-ம் தேதி சனிக்கிழமை இரவு 8-மணியளவில் நடைபெறவிருக்கும் டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றத் திறப்பு விழாவிலும், அதனையடுத்து ஆமதாபாத் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு தாயகம் செல்லவிருக்கிருர்.

# பூம்புகாரில் ஒரு நாள்

## உலகத் தமிழ் மாநாட்டுக் கவிதைப் போட்டி

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இளம் கவிஞர்களின் எழுச்சிக்கு ஆக்கமளிக்கும் வகையில், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணுவின் விருப்பத்திற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் அறிவித்த ‘புகாரில் ஒரு நாள்’ கவிதைப் போட்டிக்குத் தேன் சொட்டும் கவிதைகள் திரளாக வந்துள்ளன.

பாட்டுப் பரம்பரை, எண்ணங்களை எழிலுறக் குழைத்து வடித்துச் சத்துப் பாடல்களை—அழகிய முத்துப் பாடல்களைக் கொட்டிக் குவித்துள்ளது.

போட்டியின் கடைசித் தேதிக்குள் ஏறத்தாழ ஆயிரத்திருநூறு பழச்சாற்றுப் பாடல்கள் ஆய்வுக் குழுவின் பார்வைக்கு வந்துள்ளன.

சிலர், பாடல்களைப் பழைய ஏட்டுச் சுவடி வடிவில் அனுப்பியுள்ளனர்; சிலர், சித்திரம் சிறக்கத் தேன் கவி வரைந்துள்ளனர்.

சிலப்பதிகாரம், பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்து அவை வழி நின்று கவிதைகள் படைத்துள்ளோர் பலர்.

பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பல்வகைத் தொழில்புரிவோர் எனப் பல திறப்பட்டவர்கள் போட்டியில் கலந்துகொண்டுள்ளனர்.

பண்டைய இலக்கியங்களைப் படித்துணர்ந்து பூம்புகாரில் கற்பனைச் சிறகுகளை விரித்துப் பறந்து சுவைமிகுகாட்சிகளைச் சொல்லோவியமாக்க இப்போட்டிஎண்ணற்ற இளம் கவிஞர்கட்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

“சிறைத் தண்டனை பெற்றுள்ளோரும் இப்போட்டியில் சிந்தையைச் செலுத்தியுள்ளனர்.

“சென்னை மத்திய சிறைக் கைதிகள் மூவரும், திருச்சி மத்திய சிறைக் கைதிகள் மூவரும் கவிதைகள் யாத்து அனுப்பியுள்ளனர்.

“இவர்களுள் ஒருவர் ஆயுள் தண்டனை பெற்றவர்.

“‘சிறைப் பறவை’களை, இப்போட்டி, ‘செந்தமிழ்ச் சிட்டு’க்களாகவும் மாற்றியுள்ளது”

என்று மலர்க் குழுத் தலைவர் அமைச்சர் முத்துசாமி அறிவிக்கிருர்.

# பதுக்கல்--கள்ளக் கடத்தல் வேட்டை

## கழகத் தோழர்கள் தகவலின் பேரில் நடவடிக்கை

ஈரோட்டில் கழகத் தோழர்கள் துப்புக் கொடுத்ததன்பேரில், வடக்குக் காவல் நிலையத் தலைமைப் போலீசு அதிகாரியும், உணவு விநியோக அதிகாரியும் சென்று கருங்கல்பாளையத்திலிருந்து லாரியில் கடத்திச் செல்லப்பட்ட 93 மூட்டை அரிசியைக் கைப்பற்றினர்.

3—10—67-ல் கழகத் தோழர்கள் துப்புக் கொடுத்ததன்பேரில் வடக்குப் போலீசுத் துணை இன்ஸ்பெக்டர் பாலன், போலீசாருடன சென்று ஈரோடு நேத்தாஜி ரோடிலுள்ள அங்கமுத்து செட்டியார் கிடங்கிலிருந்தும், ஆறுமுகக் கவுண்டர் கிடங்கிலிருந்தும் யூரியா உரம் 36 மூட்டைகள் அனுமதியின்றி வைத்திருந்ததை கைப்பற்றி விவசாய அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

மேற்படி நபர்கள்மீது போலீசார் வழக்குப் பதிவுசெய்து புலன் விசாரித்து வருகின்றனர்.

# ‘ஒழித்துக் கட்டும் நடவடிக்கையை அரசு ஏற்காது’

## மத்திய அமைச்சர் கூறுகிருர்

சென்னை, அக். 11—

“வணிகர்களை அடியோடு ஒழித்துக்கட்டும் நடவடிக்கை எதுவும் அரசு எடுக்காது வணகர்கள் நல்ல பணி செய்கிருர்கள். ஒரு சிலர் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிருர்கள் என்பதற்காக வணிக சமூகத்தைக் கண்டிக்க முடியாது”

என்று, மத்திய உணவமைச்சர் ஜெகசீவன்ராம், தென்னிந்திய வர்த்தக சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

## மறைவு

காட்டுமன்னர்குடி தெற்கிருப்பு தி.மு.க. தோழர் மா. சம்மந்தம் இயற்கை யெய்தியது குறித்து கிளைக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# அமோக விளைச்சல் தரும் நெல்!

## குறுங்காலப் பயிர்--மூன்று போகம் பயிரிடலாம்

விரைந்து பெருகிவரும் மக்கள் தொகைக்கு உணவளிக்கப் போதிய உணவு உற்பத்தி செய்வதெப்படி என்பதே இன்று ஆசியாவிலேயே மிகப் பெரிய ஒரு பிரச்சினையாகும்.

உலகிலேயே அதிகமான பிறப்பு விகிதமுள்ளதெனக் கருதப்படும் பிலிப்பைன் நாட்டில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுவிட்டார்கள் என்று சொல்லலாம்.

இந்நாட்டில் நிறுவப்பட்டுள்ள உலக அரிசி ஆராய்ச்சிக் கழகம், பல ஆண்டுகளாக நடத்திவந்துள்ள சோதனைகளின் விளைவாக ஒரு புதுவகை நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அமோகமான விளைச்சல் தருகிறது. ‘ஐ. ஆர். 8-288-3’ நெல் என்பது இதன் பெயர்; ‘அற்புத நெல்’ என்று இது பெயர் பெற்றுள்ளது.

இதுவரையில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 28 மூட்டை நெல்தான் விளைந்தது. புதிய நெல் வித்து விதைத்து—சரியான முறையில் பயிரிட்டு—இரசாயன உரங்கள் போட்டு, களை–காளான் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தினுல், குறைந்தபட்சம் 130 மூட்டை மகசூல் கிடைக்கிறது. பல குடியானவர்கள் ஹெக்டேருக்கு 200 மூட்டைகளுக்குமேல் மகசூல் எடுத்துள்ளனர்.

புதிய நெல்லில் மற்ரெரு நன்மையும் உண்டு; இது ஒரு குறுங்காலப் பயிர்; எனவே குடியானவர்கள், ஒரு ஆண்டில் இரண்டு அல்லது மூன்று போகங்கள்கூடப் பயிரிட முடியும்.

பிலிப்பைன் நாட்டின் நெல் சாகுபடியாகும் மாநிலங்கள் முழுவதிலும், விளைச்சலைப் பொறுத்தவரையில் புதிய நெல் அற்புதம் விளைவித்துள்ளது. எனவே, நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக இந்நாடு அரிசி ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது.

இதுவரையில் பற்றுக்குறையை ஈடுசெய்ய ஆண்டுதோறும் அரிசி இறக்குமதி செய்துவந்தார்கள்; இனி, இந்த நிலை இருக்காது.

# சிந்தனைக்கு இரு செய்திகள்--

## ஒரே செய்தித் தாளிலிருந்து!

### தென் சென்னையில் மந்திரிகள் தேர்தல் வேலை செய்யக்கூடாது

தி. மு. கழகத்தின் முடிவுக்கு ச.சோ. கட்சி கண்டனம்

—‘நவசக்தி’ 10—10—67 இதழ்

### தென் சென்னை வெற்றி-- பக்தவத்சலத்துக்கு நாம் தரும் பிறந்த தினப் பரிசு!

மத்திய உணவு மந்திரி முழக்கம்

—‘நவசக்தி’ 10—10—67 இதழ்

—‘பாக்சர்’

# மறைந்த லோகியா பற்றி மறையாத செய்திகள்!

## கடைசி விருப்பம்

"எனது இறுதிச் சடங்குகளுக்கு, மத—சம்பிரதாய நிகழ்ச்சிகள் ஏதும் கூடாது" என்று முன்னரே கூறியிருந்தார்—டாக்டர் லோகியா; அவ்வாறே, சடங்குகள் ஏதுமின்றி, மின்சாரத்தின் மூலம் அவர் உடல் எரிக்கப்பட்டது.

## கட்சி பற்றிய கவலை

காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளில் பங்கு பெற்றிருக்கும் தனது சம்யுக்த சோஷலிஸ்டு அமைப்பின் உறுப்பினர்கள் எதிர்பார்த்த அளவுக்கு நடந்துகொள்ளாததுதான், இறக்கும் போதும் அவருக்கு மனக்கவலையை அளித்து வந்திருக்கிறது! பிணிவாய்ப்பட்டுப் படுக்கையிலிருக்கையில், கட்சியின் துணைச் செயலாளர் தன்னைச் சந்தித்தபோது, கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறியனவற்றையெல்லாம், ஆளும் வாய்ப்புப் பெற்ற மாநிலங்களில் எந்த அளவுக்குச் செயல்படுத்த முடிந்திருக்கிறது என்பதனைக் கேட்டறிந்தார்!

முடிவை, முன்கூட்டியே அறிந்தவர்போல், இம்மாதம் மூன்றாம் கிழமை ஆக்ராவில் நடக்க இருக்கும் தேசியக் குழுக் கூட்டத்துக்கு, 'வர இயலாது' என்றும் கூறியிருக்கிறார்.

## அமைச்சர்கள் பற்றிய புது விளக்கம்

"தமது கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரிடம் நெருங்கிப் பழகுவதைவிட—சோஷலிஸ்டு அமைச்சர் ஒருவர், தமது கட்சியைச் சேராத வேறு கட்சி அமைச்சர் ஒருவரிடம் நெருங்கிப் பழகுவார்; இது, அமைச்சர் பதவி வந்தவுடன் பெற்றுவிடும் மனப்பாங்கு; இதுபற்றி ஒரு புது விளக்கமே தயாரிக்கப் போகிறேன்"

என்று இரண்டு மாதங்களுக்கு முன், பீகார் மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்த பின் டாக்டர் லோகியா, பி.டி.ஐ. நிருபர் ஒருவரிடம் வேதனையும் வேடிக்கையும் கலந்து கூறியிருக்கிறார்.

## நலிந்த நிலையிலும் நகைச்சுவை!

"நான் உயிர் பிழைப்பேனா டாக்டர்?" என்று கேட்கிறார்—இறுதி நாட்களைக் கடந்துகொண்டிருக்கும் லோகியா—வெலிங்டன் மருத்துவமனையில்!

'நிச்சயமாக' என நம்பிக்கையளிக்கிறார் டாக்டர்!

அடிக்கடி நினைவு இழந்து மயக்க நிலை பெறும் நிலையிலும், டாக்டர் லோகியா கூறுகிறார்:—

"இந்தியாவில் உள்ள டாக்டர்களும் அரசியல்வாதிகளைப் போலத்தான்! அப்பாவிகள்!"

## உலகம் அறிந்த அரசியல்வாதிக்கு உடனிருந்த உறவினர் ஒருவரே!

காலஞ்சென்ற டாக்டர் லோகியா திருமணம் ஆகாதவர்; அவரது சவ ஊர்வலத்தின்போது வந்தவர்களில் குடும்பத்து உறவினர் ஒருவர் மட்டுமே; மற்றவர்கள் அனைவரும், பொது வாழ்க்கையில் உறவு கொண்டவர்கள்தான்!

## அரசியலைத் துறந்தவராலும் அழுவதைத் தடுக்க முடியவில்லை!

தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கி வாழும் ஜெயப்பிரகாஷ் நாராயணன், மயானத்தில் நடைபெற்ற லோகியாவின் இறுதி நிகழ்ச்சியின்போது, பல முறை தேம்பி அழுதார்! இறந்தவரைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை பேசி முடிப்பதற்குள் பல முறை உணர்ச்சி வயப்பட்டு, கண்ணீர் விட்டுக் கதறினார், ஜெயப்பிரகாஷ் நாராயணன்!

## சாம்ராஜ்யங்களுக்குத் 'தீ' வைத்தவர் 'தீ'க்கு இரையானார்!

இறுதிச் சடங்கின்போது பேசிய மக்களவைத் தலைவர் சஞ்சீவி ரெட்டி, 'டாக்டர் லோகியா, பல சாம்ராஜ்யங்களையே 'வேக' வைத்துவிடும் ஆற்றல் படைத்தவர்; ஆனால் இப்போது உண்மைத் தீயில் வெந்து மறைகிறார்' என்று உருக்கமாகக் குறிப்பிட்டார்.

## அரசியலில் போராடியவர் உயிருக்கும் போராடினார்!

"எதிர்ப்புக்களைச் சமாளித்து அவர் பொது வாழ்வில் போராடியே வாழ்ந்ததுபோல், கடைசி நாட்களிலும், அதே வகையில் உயிருடன் போராடியே மடிந்தார்" என்று அவரைக் கவனித்துவந்த டாக்டர் ஒருவர் கூறியுள்ளார்!

## உயிர் மூச்சு பிரியும்போதும் உயிர்க் கொள்கை பிரியவில்லை!

மருத்துவமனையில் இருந்த நாட்கள் முழுமையும் அவர், 'சோஷலிசம்' பற்றியே சிந்தித்தார்—பேசினார்—நினைவு இழந்த நிலையில் பிதற்றினார்!

உயிருக்கு மன்றாடிய நிலையிலும் அவர், உத்தரப்பிரதேசம், பீகார் மாநிலத்து உழவர் சமுதாயத்தைப் பற்றி கவலைப்பட்டார்! படுக்கையில் இருந்தபடியே உழவர் நிலைபற்றி அறிக்கை ஒன்று விடுக்க விரும்பிய அவர், முடியாமல் மயங்கி வீழ்ந்தார்!

# 'உண்மை சோஷலியவாதியை இழந்தோம்'

## லோகியா மறைவு குறித்து அறிஞர் அண்ணா

காஞ்சிபுரம், அக். 12—

டாக்டர் லோகியா மறைவு குறித்துத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா வெளியிட்டுள்ள இரங்கற்செய்தியில் தெரிவித்திருப்பதாவது:—

"டாக்டர் லோகியாவின் மறைவு எதிர்பாராதது; அவரது திடீர் மறைவால் சனநாயக இந்தியா, சுதந்தரத்துக்காகப் போராடும் ஒரு வீரரை இழந்துவிட்டது!

"எதையும் நேரிடையாக-வெளிப்படையாகப் பேசும் இயல்புடைய லோகியா, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளுக்குச் சிறந்த உறுதுணையாக இருந்தார்!

"ஆளுங்கட்சியின் கொள்கைகளை அவர் சில நேரங்களில் கடுமையாகத் தாக்கியபோதிலும் அனைவருடனும் நல்லுறவு வைத்துக்கொண்டிருந்தார். உண்மையான சோஷலிசச் சக்திகளிடை அவர் வலிமை மிக்கவராகத் திகழ்ந்தார்!

"தம் வாழ்நாள் முழுவதும் நிலையான கொள்கையுடன் வாழ்ந்து சோஷலிசத்துக்காகப் பாடுபட்டவர் இன்று மறைந்துவிட்டார்!

"அத்தகைய ஒரு நல்ல நண்பர் மறைந்ததால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் ச.சோ. கட்சி உறுப்பினர்களுக்கும் நண்பர்களுக்கும் என் உள்ளபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

# தென் சென்னைத் தேர்தல் பிரசார பொதுக்கூட்டங்கள்

★

### 14--10--67

**சேத்துப்பட்டு**

மாலை 7-மணிக்கு அம்பேத்கார் திடலில்; தலைவர்; வி. எம். பெருமாள்; பேசுவோர்: அமைச்சர் மாதவன், முரசொலி மாறன் எம்.ஏ., சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம். எல். ஏ., கோ. விசுவநாதன் எம்.ஏ.பி.எல்., எம்.பி., எம். ஏ. பழனி எம்.சி., இரா. நடராசன், வே. அரங்கநாதன், ஜே. பீட்டர்.

**சென்னை 65-வது வட்டம்**

மாலை 6-30 மணிக்கு பாலகிருஷ்ணன் பிள்ளை தெருவில்; தலைவர்: பி. ஆர். சண்முகம்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., என். வி. நடராசன் எம்.எல்.சி., க. இராசாராம் எம்.பி., முரசொலி மாறன் எம்.ஏ., ஏ. ஏ. கபாலமூர்த்தி எம்.சி., எஸ். ஜேம்ஸ், மற்றும் பலர்.

**சென்னை 100-வது வட்டம்**

தி. மு. க. கிளையின் சார்பில் மாலை 6-30 மணிக்கு; சைதை காரணீசுவரர் கோயில் [illegible]தெருவில்; தலைவர்: சந்தானம்; பேசுவோர்: அமைச்சர் முத்[illegible]சாமி, முரசொலி மாறன் எம்[illegible]., புலவர் கோவிந்தன் எம்.[illegible], சி. டி. தண்டபாணி எம்.பி., மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., சைதை சம்பந்தம், பவளவண்ணன், எம். குமார்.

### 15--10--67

**மயிலாப்பூர்**

மாலை 6-மணிக்கு
கிழக்கு மாட வீதியில்

தலைவர்:
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ

பேசுவோர்:
அறிஞர் அண்ணா

அமைச்சர்கள்
இரா. நெடுஞ்செழியன்
கே. ஏ. மதியழகன்
ஏ. கோவிந்தசாமி
சத்தியவாணிமுத்து
செ. மாதவன்
மா. முத்துசாமி
சாதிக் பாட்சா

சட்டப் பேரவைத் தலைவர்
சி. பா. ஆதித்தனார்
க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி
கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி

மயங்கிக் கிடந்தபோதெல்லாம்கூட அவருடைய உதடுகள், சோஷலிசத்தையே உச்சரித்தன!

சில சமயங்களில், 'உண்மை'—'நீதி'—'உரிமை'—'பெருமை' ஆகியவை பற்றி, மக்கள் அவைத் தலைவரிடம் பேசுவதுபோல் மயங்கிய நிலையில் பேசினார்!

ஆனாலும், மொழி பற்றி மட்டும் ஏதும் பேசவில்லை!

நினைவு இருந்தபோதும், நினைவை இழந்த நிலையிலும் அவர் பேசிய மொழி—ஆங்கிலம், வங்காளி, ஜெர்மனி, இந்தி!

## வாழ விரும்பினார்--வாழ முடியவில்லை!

இறக்கப்போகிறவர், 'வாழ விரும்புகிறேன்' என்று தெரிவிக்கும் விருப்பத்தினை, உடனிருப்பவர்கள் தங்கள் காதுகளால் கேட்பதுதான், துயரத்துக்கெல்லாம் துயரத்தைக் கொடுப்பதாகும்.

"அவர் இன்னும் கொஞ்சகாலம் வாழ்வதற்குப் பெரிதும் விரும்பினார்; 'செய்து முடிக்க வேண்டியவை பல இருக்கின்றன; அதற்காகவேனும் இன்னும் சில நாட்கள் வாழ்ந்தால் நல்லது' என அவர் கருதினார். வாழ்நாள் முழுவதும் எதிரக் கட்சி அமைப்பிலேயே இருந்துவந்திருப்பதால், 'செய்து காட்டுவது எப்படி' என்ற நம்பிக்கையின்மையும் அவரிடம் இருந்தது"

என்று, டாக்டர் லோகியாவைக் கவனித்துக்கொண்ட மருத்துவர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

—தொகுப்பு: எஸ். ஆர்.

# நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

### 14--10--67

**சென்னை 71-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு பங்காருநாயக்கன் தெருவில் (பிளாசா பின்புறம்); தலைவர்: டி. பலராமன்; பேசுவோர்: க. அன்பழகன் எம். ஏ., எம். பி., எஸ்.எஸ். தென்னரசு, இரத்தினவேல்பாண்டியன் பி.ஏ.பி.எல்., முரசொலி மாறன் எம்.ஏ., நீலநாராயணன், மு. வரதராசன், ஆதிகேசவன், எம். முருகேசன், சையத் அமானுல்லா எம்.சி., என். கிருட்டினன், டி. இராசேந்திரன், பி. கிருட்டினசாமி, தா. சானகிராமன்.

**சென்னை 82-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு மயிலை வீரப்பெருமாள் முதலி தெருவில்; தலைவர்: ஆர். சி. கே. சாமி; பேசுவோர்: ப. உ. சண்முகம்; இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., மேயர் சம்பந்தம், மைனர் மோசஸ், முரசொலி மாறன், எஸ் வி. வேலு, தமிழ்மணி, மயிலை மாறன், எம். கே. கபாலி. (மாலை 6-மணிக்கு தேர்தல் அலுவலகத்தை முரசொலி மாறன் திறந்துவைப்பார்)

**பம்பாய்**

டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு தாராவி கணேசர் திடலில்; தலைவர்: சேரை மு.இராசகோபாலன்; வரவேற்புரை: வீரை. கு. பாலன்; மன்றத் திறப்பாளர் த. மு. பொற்கோ; கொடியேற்றுபவர்: சு. நவயுவன்; அண்ணா படத் திறப்பாளர்: பி. எஸ். செல்லையா; சத்தியவாணிமுத்து படத் திறப்பாளர்: எஸ். தியாகராசன்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, எம்.ஏ.சண்முகம், களந்தை முருகேசன். பி. எஸ். எஸ். பாண்டியன், சேரை முகமது, சண்முகவேல், சி. நா. சிதம்பரம், மு. குடியரசன், நெல்லை செழியன், இ பி நயினார், குறள்தாசன், எஸ். எம். சுப்பையா, பி. யூ. இராமையா.

**சலகண்டபுரம்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: வி. இராசரத்தினம்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., ப. கண்ணன், பெ. தங்கராசு, மா. நடராசன், எம். ஆர். சேகர்.

## 'வாய்மையே வெல்லும்' கலை நிகழ்ச்சி

முதலமைச்சர் திரட்டும் துயர்துடைப்பு நிதிக்காக 14—10—67 மாலை 6-30 மணிக்கு மாடிலட்சுமி-சரசுவதி (சச்சு) நடிக்கும் நாட்டிய நாடகக் கலை நிகழ்ச்சி, அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், மவுண்ட் ரோடு பாலர் அரங்கில் நடைபெறும்.

## பெயர்ப் பலகைத் திறப்பு

சென்னை 46-வது வட்டம் நம் மாஸ்வார்பேட்டையில் 14—10—67 காலை 8 மணிக்கு மக்கள் மறுமலர்ச்சி மன்றப் பெயர்ப் பலகை திறந்துவைக்கப்படும்; மேயர் இரா. சம்பந்தம் கொடி ஏற்றி வைத்துப் பொங்கல் வழங்குவார்; மாலை 5 மணிக்கு அறிஞர் அண்ணாவின் உருவப்படம், அலங்கரிக்கப்பட்ட வண்டியில் வட்டம் முழுதும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குந்த தெரு, சென்னை-[illegible]) அச்சிட்டு வெளியிடப்பட்டது.